**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 4-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | ரகுராமன் | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**29.1.2024 OS No.26/2022 வா.சா.4 ரகுராமன் ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. வாதி ஜெயராஜ் என்ன உறவு வேண்டும் என்றால் என் மகன் ஆவார். எத்தனை லக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 2லக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் லக்க சொத்து வாதி கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். முதல் லக்க சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 145/7 ஆகும். 2-ம் லக்க சொத்து 1 ஏக்கர் 92 செண்ட் என்றால் சரிதான். பிள்ளையார் கோவில் தாவா 2-ம் லக்க சொத்தின் மேற்கு மூலையில் உள்ளது என்றால் 1 ஏக்கர் 92 செண்டின் தென்மேற்கு மூலையில் 4 செண்டில் பிள்ளையார் கோவில்உள்ளது.

2. அரசு ஆவணத்தில் 2-ம்லக்க சொத்து 1 ஏக்கர் 92 செண்ட் அரசு புறம்போக்காக உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து 100 வருடமாக எங்கள் அனுபவத்தில் உள்ளது. நான் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தேனா என்றால் 1959-1980வருடம் வரை எருக்கலவெள்ளுர் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தேன். நான் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்த காலத்தில் அரசு ஆவணங்களில் அரசு புறம்போக்கு என தாவா 2-ம் லக்க சொத்து குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது.

3. நான் தாவா 2-ம் லக்க சொத்தை 50 வருடமாக நானோ, என் மகன் வாதியோ அனுபவம் செய்து வந்ததை காட்ட ரசீதுகள் எதுவும் உள்ளதா என்றால் புயலில் அடிபட்டுவிட்டது. எந்த வருட புயலில் அவ்வாறு அடிபட்டுவிட்டது என்றால் 1955-ம் வருடமாகும். புயல் வந்த பிறகு நாங்கள் தாவா 2-ம் லக்க சொத்தை அனுபவம் செய்து வந்ததை காட்ட ரசீது எதுவும் போட்டோமோ என்றால் ரசீது போடவில்லை. நான் எனது மகனுக்காக அவருக்கு ஆதரவாக பொய்யாக அனுபவம் செய்து வருவதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வாதி என்னுடைய மகன் என்றால் சரிதான். வாதி 2லக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா 1-ம் லக்க சொத்து என் மகனுக்கு கிரையப்பாத்தியமான சொத்து என்றால் சரிதான். 2-ம் லக்க சொத்து சர்வே எண்.144/2 ஆனது அரசு ஆவணங்களில் அருள்மிகு.பிள்ளையார் கோவில் இடம் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிள்ளையார் கோவில் தென்மேற்கு மூலையில் உள்ளது. தாவா 2-ம் லக்க சொத்தில்தான் கிராம மக்கள் பிள்ளையார் கோவில் திருவிழா கொண்டாடி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

2. 2-ம்லக்க சொத்தை நாங்கள் அனுபவித்ததை காட்ட பட்டாவோ, ரசீது நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் புயலில் அடித்து சென்றுவிட்டது. 2-ம் லக்க சொத்தை நானோ, என் மகனோ எந்த காலத்திலும் அனுபவித்ததுகிடையாது என்றால் சரியல்ல. 3 தலைமுறையாக அனுபவித்து வருகிறோம். 2-ம் லக்க சொத்தில் என் மகன் ஆக்கிரமித்து வைத்திருந்ததை அரசு அதிகாரிகள் அகற்றிவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா 2-ம்லக்க சொத்திற்கும், என் மகனுக்கும் எந்த பாத்தியமோ, அனுபவமோ, உரிமையோ கிடையாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.